REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மார்கழி 16உ சனி (31—12—55) ★ ★ வெளியூர்: மார்கழி 17உ ஞாயிறு (1—1—56) [இதழ் 171

கோகினூர் வைரம் இந்தியாவிற்குத் திரும்பக் கிடைக்கும்?

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் முன்னாள் இந்திய விவகார இலாகா மந்திரியும், இப்போது மக்கள் சபையின் சபாநாயகருமான லிஸ்டோவெல் ஏர்ல் என்பார், இந்தியா திரும்பக் கேட்டுக்கொண்டிருக்கிற விலையுயர்ந்த வைரமான கோகினூர் வைரத்தை பிரிட்டிஷ் இராணி எலிசபெத்திடமிருந்து பெற்றுத்தர முயற்சிப்பதாக, இந்திய மக்கள் சபைத் தலைவர் ஜி. வி. மாவ்லங்கரிடம் கூறியிருப்பதாகத் தெரியவருகிறது.

'பேச்சுவார்த்தைகளைக் கைவிடுக'

'நேரடி நடவடிக்கைக்கு திட்டம் தீட்டுக'

சங்கர்ராவ்தேவிற்கு கம்யூனிஸ்டுகள் கோரிக்கை

'சம்யுக்த மராட்டிய பரிஷத்'தை அவசரமாக கூட்ட வேண்டுகின்றனர்

பம்பாய், டிச. 30—

"பம்பாய் நகரின் எதிர்காலம் பற்றி நடத்திக்கொண்டிருக்கும் எல்லாப் பேச்சுவார்த்தைகளையும் சர்வ கட்சி சம்யுக்த மராட்டிய பரிஷத்தின் தலைவரான சங்கர்ராவ் தேவ் கைவிட்டுவிட்டு, சம்யுக்த மராட்டியக் கோரிக்கையை வற்புறுத்துவதற்கான நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவதற்குரிய திட்டத்தை வகுக்க பரிஷத்தின் அவசரக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும்,"—என்று, பம்பாய் கம்யூனிஸ்டுக் கட்சியின் நான்காவது மாநாட்டில் கோரப்பட்டிருக்கிறது.

டிசம்பர் 23-ந் தேதி முதல் 26-ந் தேதி வரை நடைபெற்ற அந்த மாநாடு, பம்பாய் பிரதேசக் காங்கிரஸ் விதித்த தவறான தடைகளை — கட்டுப்பாடுகளை மீறிய காங்கிரசாரைப் பாராட்டியிருக்கிறது.

'கட்சிக் கட்டளையை மீறிய காங்கிரசாரும், சம்யுக்த மராட்டிய இலட்சியத்தில் பற்றுக்கொண்ட இதரரும் ஒன்று சேர்ந்து, உடனடியாக நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவதற்குரிய திட்டம் தயாரிக்க வேண்டும். சங்கர்ராவ் தேவ் முதலானோர், உடனே 'பரிஷத்'தின் அவசரக் கூட்டத்தைக் கூட்டாவிட்டால், எல்லோரும் ஒன்று சேர்ந்து உருப்படியான நடவடிக்கை எடுக்கவேண்டும்' என்றும் கம்யூனிஸ்டு கட்சி மாநாடு கோரியிருக்கிறது.

இந்தியாவில் அந்த நிலை ஏற்படுமா?

அமெரிக்காவில் 93 சதவிகிதம் பண்ணைகளுக்கு மின்சாரம் இருக்கிறதாம்!

18,00,000 பண்ணைகளில் இயந்திரங்களைக்கொண்டு வேலை நடைபெறுகிறதாம்!

2 90 00 000 ஏக்கர்களுக்கு அதிகமான பண்ணை நிலம் நீர்ப்பாசன வசதியுள்ளவையாம்!

'தலைமைப் பதவிக்கு இந்தியக் கம்யூனிஸ்டுகள் கோஷ்டிச் சண்டை'

காங்கிரஸ் ஏடுகள் தரும் செய்தி

புதுடில்லி, டிச. 30—

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியினர், தலைமைப் பதவிக்காகக் கோஷ்டிகளாகப் பிரிந்து, 'போராட்டம்' நடத்துவதாகக் காங்கிரஸ் ஏடுகள் செய்தி தருகின்றன.

ரஷ்யத் தலைவர்கள் வருகைக்கு முன், 'பி. சி. ஜோஷியின் கோஷ்டி' என்றும், 'பி. சுந்தரய்யா தலைமையில் ஆந்திர கோஷ்டி' என்றும் கம்யூனிஸ்டுக் கட்சி பிளவுபட்டிருந்தது என்றும், பதவியில் தொடர்ந்து நீடிப்பதற்காகப் பொதுச்செயலாளரான அஜாய் கோஷ் இரண்டு கோஷ்டியிலும் சேராமல், தாமரை இலைத் தண்ணீர் போல இங்குமங்கும் ஊசலாடிக் கொண்டிருந்ததாகவும், அந்த ஏடுகள் தெரிவித்திருக்கின்றன.

மேலும், ரஷ்யத் தலைவர்கள் இந்தியா வந்து, இந்தியாவைப் பாராட்டிப் பேசிச் சென்ற பின், ஜோஷி பக்கம் கட்சியினர் சாய்ந்ததாயும், தனது பதவியைக் காப்பாற்றிக்கொள்ள அஜாய் கோஷ் இப்போது, 'ஆந்திரா கோஷ்டி'யுடன் சேர்ந்துள்ளதாகவும் காங்கிரஸ் ஏடுகள் தெரிவித்திருக்கின்றன.

மேலும், வரும் ஜனவரி கடைசி வாரத்தில் நடைபெறவிருந்த கட்சி மாநாடு மார்ச் மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாயும், காரணம், ரஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சி மாநாடு பிப்ரவரியில் நடந்து முடிந்துவிட்டால் அதன் முடிவுகளைத் தெரிந்துகொள்வது பலனளிக்கும் என்று கருதப்படுவதுதான் என்றும் செய்தி தரப்படுகிறது.

விவசாய அமைச்சராக உள்ள எம். திருமல ராவ் என்பவர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

பம்பாய் நகரம் கடலுக்குள் மூழ்கி வருகிறது!

பூகர்ப்ப நிபுணரின் கருத்து

லக்னோ டிச. 29—

"பம்பாய் தீவைச் சுற்றி இப்போது நிகழ்ந்துகொண்டிருக்கும் பூகர்ப்ப மாற்றங்கள் இதே ரீதியில் நிகழ்ந்துகொண்டிருக்குமானால், இன்னும் சில ஆயிரம் ஆண்டுகளுக்குள் இந்தியாவின் இரண்டாவது தலைநகரமாக ஆக்கப்படவிருக்கும் பம்பாய் நகரம் முழுவதும் கடலுக்குள் அமிழ்ந்துவிடும்,"

என்று, பிரபல பூகர்ப்ப நிபுணரான பேராசிரியர் டபிள்யூ டி வெஸ்ட் என்பார் தெரிவித்திருக்கிறாராம்.

"அழிந்துபோன காடுகள், கடலுக்குள் அமிழ்ந்து கிடப்பதை நாம் ஏற்கனவே காண்கின்றோம்; பம்பாய் தீவைச் சுற்றி, நிலத்தைக் கடல் கொண்டு வருகிறது என்பது தெளிவான உண்மையாகும்," என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

சாகர் பல்கலைக் கழகத்தின் பூகர்ப்பப் பிரிவுத் தலைவரான டாக்டர் வெஸ்ட், மேலும் 'இதற்கு நேர்மாறாக, சௌராஷ்டிரம், மலபார் கடற்கரை விரிந்துவருகிறது,' என்றும் குறிப்பிட்டாராம்.

'இமாலய மலைத் தொடர் 8 கோடி ஆண்டுகளுக்கு முன்னால் தோன்றியிருக்கக்கூடும்' என்றும் அவர் கூறினார்!

விந்தியப் பிரதேசக் கவர்னர் விலகுகிறார்

விந்தியப் பிரதேச லெப்டினன்ட்-கவர்னராக இருந்துவரும் கே. சந்தானத்தின் பதவிக்காலம் முடிவடைவதாலும், தன்னைப் பதவியிலிருந்து விடுவித்து விடுமாறு அவர் கோருவதாலும், இந்திய சர்க்காரில் துணை உணவு-

ஏழைகள் ஏன் தான் வாழ்கிறார்களோ?

டி. டி. கிருஷ்ணமாச்சாரி கேட்கிறார்

கோவை, டிச 30—

"மூன்று நாட்களுக்கு முன்னால், தஞ்சையில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு துணிகள் வழங்குமாறு கூறினார்கள்; சுமார் நூறு பெண்கள்வரை கூடியிருந்தனர்.

"அந்த நூறு பேர்களைக் காட்டிலும், அதிகம் துன்பப்படுவோரை நான் கண்டதேயில்லை. அவர்களது சோகம் படர்ந்த முகங்கள் என்னை வட்டமிட்டுக்கொண்டே இருக்கின்றன.

"ஏன் இந்த மக்கள் வாழ வேண்டுமென்று ஆசைப்படுகிறார்களோ தெரியவில்லை. அவர்கள் முகத்தில் மகிழ்ச்சியே இல்லை. அவர்கள் கந்தைகளைத்தான் கட்டிக்கொண்டிருந்தார்கள். அத்தகு வாழ்க்கை நிலையில் உள்ளவர்களாய்த்தான் இருக்கின்றனர் நமது கிராம மக்கள்.

"பழங்காலத் தத்துவங்கள் பயனற்றவை என்பதை இளைஞர் சமுதாயம் உணர்ந்து, சமூகத்தில் ஒரு பெரும் புரட்சியை உண்டாக்கத் துணிவுடன் முயற்சிக்க வேண்டும்; எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் இதனைச் செய்வது நல்லது,"

என்று, இங்கு மத்திய சர்க்கார் வணிகத் துறை அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி குறிப்பிட்டிருக்கிறார்.

கதர் தொழிலுக்கு ரூ. 23,53,000!

புதுடில்லி, டிச. 30—

மானியங்களாகவும், கடன் தொகைகளாகவும் மேலும் ரூ. 23,53,000 கதர் தொழில் அபிவிருத்திக்கு வழங்குவதற்கு இந்திய சர்க்கார் அனுமதியளித்திருக்கின்றனர்.

வேலை நிறுத்தம் செய்யத் தூண்டிய அறுவருக்கு மரண தண்டனை

செஞ்சீன நீதிமன்றம் தீர்ப்பு

எதிர்ப் புரட்சியில் ஈடுபட்டதாகக் குற்றச்சாட்டு

ஹாங்காங், டிச. 30—

கூட்டுறவுப் பண்ணை ஒன்றின் உறுப்பினர்களான விவசாயிகளை ஐந்து நாட்களுக்கு வேலை நிறுத்தத்தில் ஈடுபடுமாறு தூண்டினார்கள் என்று குற்றஞ் சாட்டப்பட்டு, செஞ்சீனாவில் ப்யூகியன மாகாணத்தில் ஆறு பேர் தூக்கிலிடப்பட்டதாகவும், மற்றும் 16 பேர் காலவரையறையின்றி சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதாயும் கம்யூனிஸ்டுப் பத்திரிகைச் செய்திகளிலிருந்து இங்கு தெரிய வந்திருக்கிறதாம்.

தண்டிக்கப்பட்ட 22 பேர்களும் கடந்த அக்டோபர் திங்களில் கைது செய்யப்பட்டவர்கள் என்றும், இவர்கள் இரகசியமாக ஒரு கட்சி அமைத்துக்கொண்டவர்கள் என்றும், தங்களது எதிர்ப் புரட்சி உறுதிப்பாட்டை சோதித்துக் கொள்வதற்காக ஒவ்வொருவரும் ஒரு சீன அதிகாரியைக் கொல்ல வேண்டும் என்று தங்களுக்குள் முடிவு செய்துகொண்டிருந்தனர் என்றும் அந்தச் செய்திகள் கூறின.

வட சீனாவில் பீன்ஸ்டின் துறைமுகத்திலுள்ள ஒரு நீதிமன்றம் இரண்டு பேர்களுக்குத் தூக்குத் தண்டனை விதித்ததாகவும், மேலும் மூன்று பேர்களுக்கு 'எதிர்ப் புரட்சி வேலைகளில் ஈடுபட்டனர்' என்று கூறி சிறைத் தண்டனை விதித்ததாயும் நவசீன செய்தி நிறுவனம் தகவல் தந்திருக்கிறது.

அந்த நீதிமன்றம் மேலும் இருவரை மன்னித்துவிட்டதாயும், ஏனெனில் அவர்கள் தங்கள் தவறுகளை ஒப்புக்கொண்டதாயும் கூறப்பட்டது.

தெலிங்கானா ஆர்ப்பாட்டக்காரர்கள் மத்திய மந்திரிகளைச் சூழ்ந்தனர்!

ஐதராபாத் விமான நிலையத்தில் சம்பவம்

ஐதராபாத், டிச 29—

மத்திய சர்க்கார் இரயில்வேத் துறை அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி, மற்றும், விசாயத்துறை அமைச்சர் அஜீத் பிரசாத் ஜெயின் ஆகியோர் பீகம்பேட்டை விமான நிலையத்தில் வந்திறங்கியபோது, 'தெலிங்கானா தனி மாநிலமாக இருக்க வேண்டும்—ஆந்திராவுடன் இணைக்கப்படக்கூடாது' என்று கோரி, பலர் கூடி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மந்திரிகளைச் சூழ்ந்துகொண்ட அவர்கள், பத்து நிமிடங்கள்வரை கோஷங்களை எழுப்பினராம்.

ஆர்ப்பாட்டக்காரர்கள், மத்திய மந்திரிகளுக்கு மாநில முதன் மந்திரியும், இதரரும் வரவேற்புத் தருவதற்காகச் செய்திருந்த ஏற்பாடுகளை எல்லாம் குலைத்துவிட்டனராம்.

ஐதராபாத் பிரதேசக் காங்கிரஸ் தலைவர் ஜே. வி. நரசிங்கராவ்கூட விமான நிலையத்திலிருந்தாராம். மிகுந்த கஷ்டத்துடன்தான் மத்திய மந்திரிகள் இருவரும் விமான நிலைய மாளிகைக்கு அழைத்து வரப்பட்டிருக்கின்றனர்.

ஆர்ப்பாட்டம் குறித்து மந்திரிகள் இருவரும் எதுவும் கருத்தறிவித்ததாகத் தெரியவில்லை.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 31—12—'55 சனி

விலைக்கு வாங்காதீர்!

ஆச்சாரியார் அமைச்சராக இருந்தக் காலத்தில் புகுத்திய புதியத் தொடக்கக் கல்வி ஏற்பாடு, அவரையே பதவியை விட்டு விரட்டும் நிலையைக் கொடுத்துவிட்டது. அதுவுமன்றி, அக்கல்வித் திட்டத்தைப் பலப்படப் புகழ்ந்துப் பாராட்டிய கல்வி அமைச்சரையே, துளியும் வெட்கமின்றி, முன்னாள் புகழ்ந்து கூறியதற்கு மாறாகக் கூறி, திரும்பப் பெறுமாறு திட்டம் செய்துவிட்டது.

பதவியைப் பெரிதாகக் கொள்ளாது, குறிப்பிட்ட இலட்சியம்தான் பெரிதென மதித்து நடக்கும் பண்புடையவராகக் கல்வி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் இருந்திருப்பாரானால், திட்டத்தைப் புகழ்ந்து கூறி புகுத்திய அவரே, பின்னர் திரும்பப்பெற இசைந்திருக்கக் கூடாது. ஆனால், தனக்குள்ள பதவி மோகந்தான் திட்டத்தைத் திரும்பப் பெறச்செய்தது என்ற உண்மையை, கனம் கல்வி அமைச்சர் வாய்விட்டுக் கூறாமல், செயலளவில் நிறைவேற்றிக் காட்டிவிட்டார்.

திட்டத்தைத் திரும்பப் பெறும்பொழுது, மக்களின் எதிர்ப்புக்கு மதிப்பளித்தே திட்டத்தைக் கைவிடுவதாகக் கல்வி அமைச்சர் சட்டசபையில் வெளிப்படையாகக் குறிப்பிட்டுள்ளார். திட்டத்திற்கு எதிராகப் பொது மக்களின் எதிர்ப்புப் புயலெனக் கிளம்பியபொழுதும், கல்வித் திட்ட எதிர்ப்பு மறியலில் நமது கழகத்தினர் ஈடுபட்டு ஆயிரக் கணக்கில் சிறையை நிரப்பின பொழுதும், திட்டத்தை நிறுத்தி வைக்க வேண்டுமென்ற தீர்மானம் சட்டசபையில் நிறைவேறியபொழுதும், மக்கள் விருப்பத்திற்கு மதிப்பளித்து நடக்க வேண்டுமே என்று மனம் மாருத மதி மந்திரி, பதவி மோகத்தின் காரணமாக, மக்கள் விருப்பத்திற்கு இணங்குவதாகப் பொய் கூறவும் சட்டசபையில் துணிந்தார். அந்த அளவில், ஆச்சாரியாரின் கெடு நினைப்பிற்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுவிடும் எனப் பலர் நம்பி இருந்தனர். அந்த நினைப்பு மேலும் நீடிக்க முடியாது என்றே நாம் அஞ்சுகிறோம்.

ஆச்சாரியார் அமைச்சர் குழுவால் வலுக்கட்டாயமாகத் திராவிடச் சிறுர்கள் மீதுத் திணிக்கப்பட்ட புதிய கல்வித் திட்டத்தில், ஒருவேளைக் கல்வி ஏற்பாடுதான் அடிப்படைக் கொள்கையாகும். திராவிட இனச் சிறுர்களின் எதிர்காலக் கல்விக் கண்ணைக் குத்திக் குருடாக்கும் கெடுமதிக்கு, அந்த ஒருவேளைக் கல்வி ஏற்பாடு தான் ஊற்றுக்கால் ஆகும். சிறுர்கள் அனைவரும் அவரவா குலத் தொழிலை மற்றொரு வேளையில் பயில்வது என்பது. திட்டத்தின் வேறொரு பெருங் கேடாகும்.

அக்கேடுகளை அப்படியே உள்ளடக்கிக்கொண்டு, அக் கேடுகளை விளக்கிக் கூறும் சொற்றொடர்களை எல்லாம் முன் எச்சரிக்கையாக விட்டு விட்டு, 'ஷிப்டு முறை' என்ற புதுப் பெயரில், ஆச்சாரியார் புதியத் தொடக்கக் கல்வித் திட்டத்தை, அடுத்தப் பள்ளி ஆண்டு முதல் புகுத்த, கல்வி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் முயற்சித்து வருவதாகத் தெரிகிறது.

பெரும் அளவில் சிறுர்களைப் பள்ளிகளில் சேர்ப்பதற்கு சிறந்த வழியாக இதுதான் இருக்கிறது எனவும கல்வி அமைச்சர், திட்டக் குழுவால் நியமிக்கப்பட்ட கல்வி நிபுணர் குழுவிடம் இயம்பியும் உள்ளாராம்.

இந்த 'ஷிப்டு முறை' ஏற்பாட்டின் மூலம், 'கட்டிடம், ஆசிரியர் கூடுதலாகத் தேவைப்படாத வகையில் பெரும் அளவில் சிறுர்களுக்குக் கல்வி பெற வாய்ப்பு ஏற்படுகிறது. பெற்றோர்களுக்கு ஒருவேளையில் உதவி அளித்து, மற்றொரு வேளையில் கல்வி கற்க வசதி அளிப்பதால், மேலும் அதிகமான எண்ணிக்கையில் சிறுர்கள் பள்ளிக்கு வரக்கூடும்' என்பது நிபுணர் குழுவின் கருத்தாகவும் இருக்கிறது.

இதை ஒரு ஆதரவாகக் கொண்டு, 'ஷிப்டு முறைக்கு எவ்விதமான எதிர்ப்பும் இல்லாதவகையில் ஒரு தொடக்கக் கல்வித் திட்டத்தை உருவாக்க அரசாங்கம் முயன்று வருகிறது' எனக் கல்வி அமைச்சர், சேதி தந்துள்ளார்.

ஒருவேளை படிப்பது, மற்றொருவேளை குலத் தொழிலைப் பயிலுவது என்பது ஆச்சாரியாரின் புதிய தொடக்கக் கல்வித் திட்டத்தின் உள்ளடக்கமாகும்.

'ஷிப்டு' முறையிலும் ஒருவேளை படிப்பது, மற்றொருவேளை பெற்றோர்களுக்கு உதவி அளிப்பது என்பதுதான் உள்ளடக்கமாக இருக்கிறது. ஆச்சாரியார் கல்வித் திட்டத்தில் விளக்கமாகக் கூறப்பட்டிருந்ததுபோல் 'குலத் தொழில் பயிலுவது' என்பதில்லாமல், 'பெற்றோர்களுக்கு உதவி அளிப்பது' என்று நாகரிகமான வாசகம் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாசகத்தில்தான் மாறுதல் புகுத்தப்பட்டிருக்கின்றதே அல்லாமல், சாரத்தில் எந்தவித மாறுதலும் செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே, 'ஷிப்டு' முறை, ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டத்தின் மறுபதிப்பேயாகும் என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது.

ஆட்சிப் பொறுப்பிலிருந்து ஆச்சாரியார் விரட்டி அடிக்கப்பட்டதுடன், அமைச்சராக இருந்து அவரால் இயற்றப்படக்கூடிய கேடுகளும் அவரோடு தொலைந்தொழியும் எனப் பலர் நம்பினர். ஆனால், அந்த நம்பிக்கை ஆதாரமற்றது என்றே இப்பொழுது எண்ண வேண்டியதாக இருக்கிறது.

ஆச்சாரியார்தான் பதவியிலிருந்து விரட்டப்பட்டாரே ஒழிய, அவர் வெளியே இருந்தாலும் அவரால் அமைச்சர் குழு மூலம் இழைக்கக்கூடிய கேடுகளைத் தடுப்பதற்குரிய வகை செய்யப்படக் காணேம். அவருடைய வாரிசாக கல்வி அமைச்சர் கனம் சுப்பிரமணியம், அமைச்சர் குழுவில் இடம் பெற்றிருக்கும் வரையில், ஆச்சாரியாரின் வக்கிரபுத்தி, அமைச்சர் குழு மூலம் செயல்பட்டே தீரும் என்றே எண்ணவேண்டியதாக இருக்கிறது. இவ்வெண்ணத்தை உறுதி செய்கிறது, கல்வி அமைச்சரின் புதிய 'ஷிப்டு' முறை ஏற்பாடு!

புதிய கல்வித் திட்ட எதிர்ப்பை ஒரு பெரும் வாய்ப்பாகக் கொண்டுதான், ஆச்சாரியாரை கனம் காமராசர் பதவியை விட்டு அடித்துத் துரத்தினார் என்பது வரலாறு.

காமராசர் 'கன'மானதற்கும் கல்வித் திட்ட எதிர்ப்புக்கும் நெருங்கியத் தொடர்பும் உண்டு.

கனம் காமராசரின் எதிர்ப்புக்குப் பாத்திரமாக இந்தப் புதிய கல்வித் திட்டத்தை 'ஷிப்டு' முறை என்ற பெயரால் திராவிடச் சிறுர்கள்மீது திணிக்க, கல்வி அமைச்சர் மேற்கொண்டுள்ள சதி, முதலமைச்சரின் ஒப்புதல் பெற்ற ஒன்றாக இருக்க முடியும் என எண்ணுவதற்கில்லை. புதிய கல்வித் திட்டத்தின்பால் அன்று அவர் கொண்ட கருத்தைத்தான், 'கன'மான பிறகும் காமராசர் கொண்டிருப்பார் என நிச்சயமாக நம்புகிறேம்.

'ஷிப்டு' முறைக்கு இப்பொழுதே முற்றுப் புள்ளி வைக்க முதலமைச்சர் முன்வரவேண்டும். அதுவுமன்றி, கல்வி அமைச்சரின் இப்போக்கை ஒரு வாய்ப்பாகக் கொண்டு, ஆச்சாரியாரைப் பதவியிலிருந்து விரட்டியது போன்று, கனம் சுப்பிரமணியத்தையும் பதவியிலிருந்து வெளியேற்ற முதலமைச்சர் துணிவு கொள்ளவேண்டும்.

இந்த இரண்டில் எதையும் செய்ய மனமில்லாது 'ஷிப்டு' முறை நுழைக்கப்பட்ட பிறகு, அதுபற்றி நாட்டில் ஏற்படுகிற எதிர்ப்பின் அளவைக் கொண்டு, எடுக்க வேண்டிய நடவடிக்கையின் தன்மையை நிச்சயிக்கலாம் என முதலமைச்சர் நினைத்தாலும் நினைக்கக்கூடும். ஆனால் அத்தாமதம், முதலமைச்சருக்கே விஷப் பரீட்சையாக முடிந்தாலும் முடியக்கூடும்.

எனவே, மீண்டும் எதிர்ப்புப் புயல் கிளம்பும் ஆபத்தை விலைக்கு வாங்காதீர் என்று எச்சரிக்கிறேம்.

நீதிபதிகளுக்குக் 'கல்தா'

ரஷ்ய மக்கள் சபை முடிவு

மாஸ்கோ, டிச. 29—

தலைமை உயர் நீதிமன்ற நீதிபதிகளான சஸ்லின், சுல்தின் என்ற இருவரையும் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, அவர்கள் இடத்தில் சொஸ்ட்ரோமின், கிரிட்சின் என்ற இருவரை அமர்த்த இங்கு கூடிய சோவியத் மக்கள் சபை முடிவு செய்தது. இந்த நடவடிக்கைக்கு வழக்கம்போலக் காரணம் எதுவும் கூறப்படவில்லை.

புதுவையில் துறைமுக அமைப்பு உருவாகிறது

ரூ 29 இலட்சம் செலவில். புதுவையில் ஒரு புதிய துறைமுகம் நிர்மாணிப்பது சம்பந்தமான அமைப்புகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன.

'கல்வியின் சிறப்பு முழு அளவில் உணரப்படவில்லை'

'வரவு-செலவுத் திட்டத்தில் 10 சதவிகிதம்கூட கல்விக்கென ஒதுக்குவதில்லை'

'ஒரு சல்லியைக்கூட கல்வித் துறையில் பிரிட்டன் குறைத்துக்கொள்ளவில்லை'

இந்திய சர்க்கார் கல்வி ஆலோசகர் உமாயூன் கபீர் கருத்துரை

புதுடில்லி, டிச. 28—

"நமது நாட்டில் கல்வியின் சிறப்பு உணரத்தக்க முழு அளவில் உணர்ந்துகொள்ளப்படவில்லை எனக் காண வருந்துகிறேன். 1947-ம் ஆண்டிலிருந்து கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியை நான் அறியாதவனல்ல. இருந்தாலும், நாம் மேற்கொண்ட முயற்சி, நமது சக்தியைப் பிரதிபலிப்பதாக அமைந்திருக்கிறது என வரலாறு தீர்ப்புக் கூறும் என்பதை நான் நம்பவில்லை."

"எதிர்காலக் குடிமக்களை ஆக்கவேண்டியதற்குரிய சாதனமாகக் கல்வி இருந்தபோதிலும்கூட, ஒன்றிரண்டைத் தவிர்த்து, பெரும்பாலான மாகாணங்கள் தங்கள் வரவு–செலவு திட்டத்தில் பத்து சதவிகிதத்தைக் கல்வித் துறைக்கு ஒதுக்குவது மிக அரிதாக இருக்கிறது. மற்றத் துறைகளில் செலவழிக்க வேண்டிய கட்டாயமும், பணமுடையுந்தான் இதற்குக் காரணமாகுமென, வழக்கமான விளக்கம் தரப்படுகிறது. இவ்வளவையும் ஒதுக்கிப் பார்த்தாலும், முக்கியத்துவம் தரப்படும் பட்டியலில், முதல், இரண்டாவது, மூன்றுவது இடத்தைக் கூட கல்விக்கு அளிக்கவில்லை என்ற உண்மையை அவர்கள் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும்."

"இரண்டாவது உலகப் பெரும் போர்க் காலத்தில், தேசீயக் கல்வியைத் திருத்தி அமைக்கும் விரிந்த பெரும் பணியை பிரிட்டன் மேற்கொண்டது. அதற்குத் தேவைப்படும் தொகையில் ஒரு சல்லியைக்கூட குறைத்துக்கொள்ள முடியாது என, 1949—51 ஆண்டின் நெருக்கடியான பணமுடை காலத்தில் கூட பிரிட்டன் மறுத்துவிட்டது."

—இக்கருத்தை இந்தியப் பேரரசின் கல்வி ஆலோசகரான உமாயூன் கபீர், அகில இந்தியக் கல்வி மாநாட்டின் தலைமை உரையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் சொன்னார்:—

"பள்ளிகளின் பொருளாதாரத் தன்நிறைவு, ஆதாரக் கல்வியின் மிக முக்கியமான—தவிர்க்க முடியாத ஒரு அம்சம் என்று கருதப்படுகிறது இது பல்வேறு 'கோணங்'களிலிருந்து கவனமாகப் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

"ஆதாரக் கல்வி பற்றி காந்தியார் தனது கருத்தை உருவாக்கிய சூழ்நிலைகள் நிச்சயமாக இப்போது நிலவவில்லை. அன்னிய சர்க்கார் இந்த நாட்டை ஆண்டுக்கொண்டிருந்தபோது, கல்விக்குப் போதுமான பணம்—இலட்சக்கணக்கான பள்ளி செல்லும் குழந்தைகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தரவேண்டிய பணம்—ஒதுக்கப்படவில்லை. இன்று நிலைமை முழுவதும் வேறுபட்டதாகும்; இன்று, ஒரு தேசீய சர்க்கார ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறது.

"நாம் விரும்புகிற அளவை விடக் குறைந்தது என்றாலும், கடந்த எட்டாண்டுக் காலத்தில் பொதுத்துறைச் செலவு ரூ. 300 சதவிகிதம்வரை அதிகரித்திருக்கிறது.

'எனவே, கடந்த காலத்தைப் போல, இப்போதும் பள்ளிகளின் பொருளாதாரத் தன் நிறைவு குறித்துக் கட்டாயம் இருக்கவேண்டுமா என்பது சந்தேகத்திற்குரியது தான்.

"குறிப்பாக, சுதந்திர இந்தியா ஒரு கூட்டுப் பொருளாதார இலட்சியத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது கூட்டுப் பொருளாதாரம், அணுசக்தி உபயோகம் தரக்கூடிய — இன்னும் காணப்படாத வளங்களையும், மற்றும் எல்லா வகையான இயந்திரங்கள், விசைகள் இவற்றையும் உபயோகிக்கக்கூடிய ஒன்றாகும்; ஆனால், ஆதாரக் கல்வியின் பொருளாதாரத் தன் நிறைவு இலட்சியமோ மனித உழைப்பை அடிப்படையாகக் கொண்ட சுருங்கிய பொருளாதார ஏற்பாட்டுடன் இணைக்கப்பட்ட ஒன்று இந்த நிலையிலும், முன்போலவே பள்ளிகளின் பொருளாதாரத் தன் நிறைவிற்கு முக்கியத்துவம் தரவேண்டுவது அவசியமதானு என்பதைச் சிந்திக்கவேண்டும்"

மேலும் கல்வி நிலையில் தேவையான மாறுதல்களைச் சாதிப்பது

(3-ம் பக்கம் பார்க்க)

இனிப்பான செய்தி!

சென்னை, டிச. 29—

நாடு முழுமையிலும் மொத்தத்தில் 40 புதிய சர்க்கரை ஆலைகளை நிறுவுவதற்கு இந்திய சர்க்கார் அனுமதியளித்துள்ளனராம்; இவற்றின் மொத்த உற்பத்தி 6 இலட்சம் டன்களாம். தற்போது இந்தியா முழுமையிலும் ஆண்டிற்கு 16 இலட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறதாம்.

இனி சர்க்கரை விலை குறைந்துவிடுமாம்; அதன் விளைவாக, மக்கள் அதிக அளவில் சர்க்கரையை உபயோகிப்பார்களாம்; 1960-ம் ஆண்டில், இந்தியா முழுமையிலும் 225 இலட்சம் டன் சர்க்கரை செலவாகுமாம்—இவ்வாறெல்லாம் மத்திய உணவு அமைச்சர் இங்கு கூறியுள்ளார்.

கோவாவின் ஆசை!

கராச்சி, டிச. 29—

டாக்காவிலும், லாகூரிலும் கௌரவ தூதுவராலயங்களைத் திறந்துகொள்ள கோவா சர்க்கார், பாகிஸ்தான் சர்க்காரின் அனுமதியைக் கோரியிருக்கின்றனராம் அநேகமாக அனுமதி தரப்பட்டுவிடலாம் என்று கூறப்படுகிறது.

'ஆதிக்கத்தை நீடிக்க இயலாது!

பண்டித பந்த் விளக்கம்

தார்வார், டிச. 29—

'கோவாவை, போர்ச்சுகலின் மாகாணம் என்றழைப்பது மதிகெட்ட செயலாகும்.

"யார் அப்படிச்சொல்கிறார்களோ

(4-ம் பக்கம் பார்க்க)

காஷ்மீர் 'லாட்டரி' போடுகிறது— பம்பாய் சட்டம் உடைபடுகிறது!

பம்பாய் அரசாங்க செயல் முறையில் இந்தியப் பேரரசின் குறுக்கீடு!

ஜம்மு—காஷ்மீர் செஞ்சிலுவைச் சங்கத்திற்காக நிதி திரட்டும் பொருட்டு, லாட்டரி ஒன்று நடத்துவது என முடிவு செய்து, காஷ்மீர் சர்க்கார், இந்திய சர்க்காரின் உதவியை நாடினர். இந்திய சர்க்காரும் இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களிலும், 'லாட்டரி' டிக்கெட்டுகள் விற்பதற்கு அனுமதி அளித்தனர்.

உடனே பம்பாயில் உள்ள காஷ்மீர் சர்க்காரின் வர்த்தகப் பிரதிநிதி 'லாட்டரி' டிக்கெட்டுகள் விற்பனை குறித்துப் பத்திரிகைகளில் தகவல் தந்தார்; டிக்கெட்டுகள் விற்பனையாகத் தொடங்கின.

ஆனால், இந்தத் திட்டம், பம்பாய் சர்க்காரின் 'லாட்டரி'கள், பரிசுப் போட்டிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கு முரண்பட்டதாயிருக்கவே, டிக்கெட் விற்பனையை நிறுத்துமாறு, காஷ்மீர் வர்த்தகப் பிரதிநிதியைப் பம்பாய் சர்க்கார் கோரினர்.

'டிக்கெட்டுகள் சில நூறு விற்பனையாகிவிட்டனவே' என்று கூறப்பட்டபோது, 'இனிமேலாவது விற்பனையை நிறுத்துங்கள்' என்று பம்பாய் சர்க்கார் கோரியது.

உடனே காஷ்மீர் சர்க்கார், மீண்டும் இந்திய சர்க்காரின் அனுமதியை நாடினர்.

தொடர்புடைய சட்டத்தை காஷ்மீர் சர்க்காருக்காகத் தளர்த்துமாறு பம்பாய் சர்க்காரை இந்திய சர்க்கார் கோரியதின் பேரில், பம்பாய் சர்க்கார் சலுகை தந்தனர்.

இப்போது 'லாட்டரி' டிக்கெட்டுகள் விற்பனையாகிக்கொண்டிருக்கின்றன!

ஜோர்டான் விவகாரம்

பிரிட்டன் இழைத்த தவறு

கெய்ரோ, டிச 28—

"பாக்தாத் ஒப்பந்தத்தில் ஜோர்டானை இணைப்பதற்காகப் பிரிட்டன் மேற்கொண்ட முயற்சிகளில் பெரும் தவறு இழைத்து விட்டது,"

என்று, எகிப்திய பிரதமர் நாசர் கூறியதாக அவருடன் பேச்சு வார்த்தை நடத்திய பிரிட்டிஷ் தொழிற் கட்சி மக்கள் சபை உறுப்பினர் ரிச்சர்டு கிராஸ்மன் தெரிவித்திருக்கிறாராம்.

சமீப காலத்திய நிகழ்ச்சிகள் குறித்த கர்னல் நாசரின் கருத்துகள் தன்னைப் பெரிதும் கவர்ந்தன என்றும் அவர் தெரிவித்தாராம்.

ஜோர்டானை இடதுசாரியிலிருந்து வலது சாரிக்கு இழுத்துக் கொள்ள பிரிட்டன் முயற்சித்ததாயும், ஆனால் இந்த முயற்சியில் பிரிட்டன் ஜோர்டானை இழந்து விட்டதாகத் தான் அஞ்சுவதாயும் நாசர் கருதுவதாக, ரிச்சர்டு கிராஸ்மன் தெரிவித்திருக்கிறாராம்.

'திராவிட நாட்டில் தெலுங்கு பேசுவது குற்றமாகாது'

வ. ஆ. மாவட்ட ஆட்சி மன்றக் கூட்டத்தில் ஏ. எல். சி. கிருட்டிணசாமி

வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சி மன்றக் கூட்டம் 27—12—55-ல், தலைவர் திரு டி. பி. கேசவ ரெட்டியார் தலைமையில் நடைபெற்றது.

தோழர் பி. எஸ் பாலாஜி என்ற உறுப்பினரின் கேள்விக்கு தலைவர் தெலுங்கில் பதிலளித்தார்.

அதை எதிர்த்து, திரு. சந்திரசேகரன் என்ற உறுப்பினர் தமிழில் கேள்வி கேட்டால் தெலுங்கில் பதில் கூறலாமா?' என்று வினவினர்.

உடனே தோழர் ஏ. எல். சி. கிருட்டிணசாமி எழுந்து, 'தெலுங்கிலும் பேசலாம்; கன்னடத்திலும்—ஏன், மலையாளத்திலும பேசலாம்; காரணம், இது திராவிட நாடு; நான்கு மொழியிலும் பேசுவது குற்றமாகாது' என்று கூறினர்.

* * *

புயல் நிவாரண நிதிக்கு நன்கொடை

உறுப்பினர்கள் அன்பளிப்பு

அன்றையக் கூட்டத்தில், "உறுப்பினர்களின் 'பிரயாணப் படி'த் தொகையான ரூ 500-ம் புயல் நிதிக்குத் தரவேண்டும்,"

என்ற துணைத் தீர்மானமொன்றை தோழர் ஏ. எல். சி. கிருட்ணசாமி கொண்டுவந்தார்; அதை. தோழர் பி. எஸ் பாலாஜி ஆதரித்தார். தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

★

கழகத் தோழர்களின் தளரா முயற்சி

சென்னப்பநாய்க்கன் பாளையம்

தி. மு. கழகச் சார்பில் சென்னப்ப நாய்க்கன்பாளையம், மழவராயநல்லூர், பட்டீசுவரம், கச்சராய குப்பம் ஆகிய கிராமங்களில் கழகத் தோழர்கள் நிவாரண நிதியாக ரூ. 65—8—0 வசூலித்து தஞ்சை மாவட்டச் செயலாளர் என். எஸ். இளங்கோ அவர்களுக்கு அனுப்பினர்.

வெள்ளலூர்

தி. மு. கழகத் தோழர்கள் பொது மக்களிடம் ரூ 20; 70 படி அரிசி; 9 துணி உருப்படிகளைத் திரட்டினர்.

★

நஷ்டத்தில் பாதிதான் டில்லி ஏற்குமாம்!

சென்னை, டிச. 29—

"புயலால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு விநியோகிப்பதற்கு, மத்தியச் சேமிப்பிலிருந்து எவ்வளவு வேண்டுமானாலும் அரிசியை எடுத்துக்கொள்வதற்கு மத்திய சர்க்கார் முன்னமேயே சென்னை சர்க்காருக்கு அனுமதி வழங்கியிருக்கிறது; ஆனால், இந்த அரிசி விற்பனையில் ஏற்படும் நஷ்டத்தில் 50 சதவிகிதப் பங்கைத்தான் இந்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ளும்" என்று, மத்திய சர்க்கார் அமைச்சர் அஜீத் பிரசாத் ஜெயின் குறிப்பிட்டுள்ளார்.

ஜனவரியில்தானும்!

முன்னாள் பிரெஞ்சுப் பிரதேசங்களின் சட்டப் பூர்வமான அதிகார மாற்றத்தில், இனி ஏதும் சங்கடங்கள் இருக்காதாம்; என்றாலும், இதுபற்றிய பேச்சு வார்த்தைகள் நடைபெறவில்லை யென்றும், பிரான்சில் இப்போது சர்க்காரே இல்லையென்ற நிலைமை ஏற்பட்டுள்ளதென்றும், ஜனவரியில் அங்குத் தேர்தல்கள் நடைபெறறு, புதிய பார்லிமெண்ட் கூடும்போது தான் இதுபற்றிய பிரச்சினை எடுத்துக் கொள்ளப்படுமென்றும் இந்தியாவிலுள்ள பிரெஞ்சுத் தூதுவர் கூறியுள்ளார்.

இலங்கை தி. மு. கழகத் தோழர்களுக்கு

"தமிழரின் தனிப் பெருந் திருநாளான பொங்கல் பெருநாளைக் கொண்டாடுவதற்கு, இலங்கை தி. மு. கழகம் 'பொங்கல் வார'மாக 14—1—56 முதல் 22-1-56 வரை ஒரு வார காலத்தை ஏற்படுத்தியுள்ளது.

"இந்த ஒரு வார காலத்தில் வசதிபோல் கூட்டம் நடத்தியும், திருக்குறள் நெறியைப் பரப்பியும் கொண்டாடுமாறு கழகத் தோழர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்,"

என்று, இலங்கை தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. அதிமணி அறிவிக்கிறார்.

மலேயா கம்யூனிஸ்டுகள் சர்க்காருடன் பேச்சுவார்த்தைகள்

தோல்வியில் முடிந்தன

பாலிங் (வடமலேயா), டிச 29—

மலேயா கம்யூனிஸ்டுகளுக்கும்—சர்க்கார் பிரதிநிதிகளுக்குமிடையே கடந்த இரண்டு நாட்களாக இங்கு நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தோல்வியுற்றுவிட்டன என்றும், புதிய பேச்சுவார்த்தைகள் பிறிதோர் நேரத்தில் நடைபெறலாம் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் தெரியவருகிறது.

'நாங்கள் ஒருபோதும் சரணடைய ஒப்பமாட்டோம்; எங்களில் கடைசி நபர் இருக்கும்வரை தொடர்ந்து போராடுவோம்' என்று, 3,000 கம்யூனிஸ்டுகளின் தலைவரான சிங் பெங் இறுதியாகக் கூறிவிட்டு காட்டிற்குள் புகுந்துவிட்டாராம்.

'ஆயுதங்களை ஒப்படைத்து சரணடையும் கம்யூனிஸ்டுகளுக்கு மலேயா நாட்டின் மீது விசுவாசம் இருக்கிறதா என்று விசாரணை நடைபெற வேண்டும்—அல்லது, கம்யூனிஸ்டுகள் எல்லாம் சீனாவிற்கு அனுப்பப்பட வேண்டும்' என்று, சர்க்கார் தரப்பில் கோரப்பட்டதை ஏற்க சிங் பெங் மறுத்துவிட்டிருக்கிறார்.

'நாட்டில் உள்ள போலீஸ் படை, பாதுகாப்புப் படை முதலியவற்றின்மீது, என்று மலேயா சர்க்கார் முழு அதிகாரமும் பெறுகிறதோ அன்று வேண்டுமானால் கம்யூனிஸ்டுகள் தங்கள் ஆயுதங்களை ஒப்படைக்கச் சம்மதிப்பார்கள்' என்று சிங் பெங் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

மலேயா முதன் மந்திரி தெங்கு அப்துல் ரெஹ்மான், சிங்கப்பூர் முதன் மந்திரி டேவிட் மார்ஷல் இருவருக்கும் கம்யூனிஸ்டுகள், தாங்கள் அம்மாதிரிச் செய்வது, ரெஹ்மான் சர்க்கார் கடந்த செப்டம்பர் திங்களில் வெளியிட்ட மன்னிப்புப் பிரகடனத்தின் கீழ் சரணடைவது ஆகாது என்றும் தெளிவாக விளக்கினர் எனத் தெரியவருகிறது.

'கம்யூனிஸ்டு கட்சிக்கு அங்கீகாரம் அளிக்க வேண்டும்' என்ற கோரிக்கையை இரு முதன் மந்திரிகளும் நிராகரித்துவிட்டிருக்கின்றனர்.

'பேச்சுவார்த்தைகள் முறிந்துவிட்டதாகக் கொள்ள முடியாதென்றும், ஏனெனில், தான் இதர மலாயா கம்யூனிஸ்டுகளுடன் கலந்து பேசவேண்டியிருப்பதாகவும் சிங் பெங் தெரிவித்திருக்கிறார். அதனால், மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவது சாத்தியமே' என்று, மலாயா முதன் மந்திரி தெங்கு ரெஹ்மான் பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

உமாயூன் கபீர் பேச்சு

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பற்றி உமாயூன் கபீர் குறிப்பிட்டதாவது:—

"ஆசிரியர்களின் தரம் உயர்த்தப்படவேண்டும். ஒவ்வொரு தலைமுறையிலும் மிகத் திறமைசாலிகளான ஆண்களிலும் பெண்களிலும் ஒரு பிரிவினர், ஆசிரியத் தொழிலுக்கு ஈர்க்கப்பட்டு பணிபுரிந்தால்தான் இந்தியாவில் கல்வியைத் திருத்தி அமைப்பது சாத்தியமான ஒன்றாகும்.

"இதற்கு ஆசிரியர்கள் மீது சமூகம் கொண்டுள்ள கண்ணோட்டத்தில் ஒரு புரட்சிகரமான மாறுதல் தேவை.

"இன்றைய ஆசிரியர்கள், பல தொழில்களுக்கும், வேலைகளுக்கும் முயற்சித்து, கடைசியாகத்தான் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டிருக்கின்றனர்.

"இது சராசரி ஆசிரியர், தரத்தில் குறைவானவர்களாயிருக்கின்றனர் என்பதை மட்டுமின்றி, ஏமாற்றமுற்றவர்களாக வேறு இருந்துவருகின்றனர் என்பதைக் காட்டுகிறது.

"ஒரு தேசீய சேவையாகக் கல்வியை மாற்ற வேண்டுமானால், ஆசிரியர்களுக்கு; இதர திறமைசாலிகளுக்கு வேறு வேலைகளில் கிடைக்கக்கூடிய அளவுக்குச் சம்பளம், வாழ்க்கை வசதிகள் முதலியன தரப்பட வேண்டுவது இன்றியமையாததாகும்."

தொடர்ந்து உமாயூன் கபீர் குறிப்பிட்டதாவது:—

"நமது கல்வி முயற்சியின் நோக்கமெல்லாம், இளைஞர் சமுதாயத்திற்கு ஒரு விஞ்ஞான நோக்கத்தை—உணர்வை ஊட்டுவது தான்.

"விளைவுகளைக் கணக்கிலெடுத்துக் கொள்ளாது உண்மைகளைக் கண்டறிவதில் நாட்டம் செலுத்துவதே விஞ்ஞான நோக்கமாகும்.

பெங்களூரில் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன்

வரவேற்பும்—பாராட்டும்

25—12—55 காலை 7 மணிக்கு, கண்டோன்மெண்ட் இரயில் நிலையத்தில், தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் அவர்களுக்கு மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

சிறிது நேர ஓய்வுக்குப் பின், 'பாரத் பவனி'ல், தோழர் ஏ டி. பிரான்சிஸ் தலைமையில் தி. மு. கழக ஊழியர்கள் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தின் நோக்கத்தை விளக்கி தோழர் கி சோழன் பேசிய பின், மாவட்டச் செயலாளர் தோழர் எஸ் வி பதி, தோழர் எஸ் ஜே உசேன் ஆகியோர் கழக நிலைகுறித்துப் பேசினர்.

பின்னர், துணைப் பொதுச் செயலாளர் என் வி. நடராசன் அவர்கள் கழகம் செயலாற்ற வேண்டிய பணிகள் குறித்தும், கழகத் தோழர்கள் நடந்துகொள்ள வேண்டிய முறைகள் குறித்தும் அரியதோர் கருத்துரை வழங்கினார்.

பகல் உணவுக்குப் பிறகு 2 மணியளவில் துணைப் பொதுச்செயலாளர் அவர்கள், தோழர்கள் எஸ். வி பதி, கி. சோழன் ஆகியோருடன் அக்கிப்பேட்டை, இலக்குமணபுரி, சீராமபுரம், இராமச்சந்திரபுரம், பிளாக்பள்ளி ஆகிய கிளைக் கழகங்களையும், பாரதிதாசன் படிப்பகம், பைந்தமிழ் நாடக மன்றம், சாந்தி நூல் நிலையம் ஆகியவற்றையும் பார்வையிட்டார்.

ஆங்காங்கே கழகத் தோழர்கள் பெருந்திரளாகக் கூடி நின்று துணைப் பொதுச்செயலாளரை வரவேற்றார்கள்.

மாலை 6 மணிக்கு பிளாக்பள்ளி தி. மு கழகச் சார்பில், கழகக் கட்டிடத்தின் எதிரில் மாபெரும் பொதுக்கூட்டமொன்று தோழர் ஜி. எப். லூயிஸ் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் ஆயிரக் கணக்கான மக்கள் திரண்டிருந்தார்கள்.

தலைவர் முன்னுரைக்குப் பின், தோழர் ஜே கனகசுந்தரம் சமுதாயச் சீர்திருத்தம் பற்றி சிறிது நேரம் பேசினார்.

தோழர் கி. சோழன் தமிழகத்திலே வீசிய புயல் கொடுமை பற்றி விளக்கி, அவதியுறும் மக்களுக்கு கர்நாடகம் தக்க உதவி தரவேண்டுமெனக் கோரினார்.

இறுதியாகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களை, தி. மு. கழகத்தின் சமுதாய—அரசியல்—பொருளாதார நிலைகள் விளக்கியும், புயல் கொடுமைக்கு ஆளான மக்களின் நிலை குறித்தும் சுமார் 1½ மணி நேரம் பேசினார்.

துணைப் பொதுச் செயலாளர் அவர்களுக்கு எல்லா கிளைக் கழகங்கள் சார்பிலும், மன்றங்கள் சார்பிலும் கைத்தறித் துணிகளும், மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

மிருகத்தனமான தலையீடு?

கிழக்கு ஐரோப்பாவிலுள்ள கம்யூனிஸ்டு நாடுகளுக்கு ஜெனரல் ஐசனோவர் உட்பட பல அமெரிக்கத் தலைவர்கள் கிறிஸ்துமஸ் செய்திகள் அனுப்பியதை குருஷ்சேவ் பலமாகக் கண்டித்துள்ளார்.

"இச்செய்கை, இந்த நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் செய்யப்படும் மிருகத்தனமான தலையீடாகும்," என்று அவர் குறிப்பிட்டார்.

இராசேந்திரர் கருத்து

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் சொன்னார்:—

"வாழ்க்கைத் தேவைக்குப் பொருந்துமாறு நாட்டின் கல்வி முறையை மாற்றியமைப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை; இம் முயற்சியில் நாம் தோல்வியுற்று விட்டதாகவே கூறலாம்; தக்க முயற்சியும் செய்யத் தவறிவிட்டோம்; முயற்சி செய்திருந்தால், நாட்டின் வாழ்க்கை நிலைக்குத் தக்கவாறு கல்வி முறையை மாற்றியமைப்பதில் வெற்றி பெற்றிருப்போம்.

"150 ஆண்டுகளுக்கு முன்பு, நாட்டின் கல்வி முறை எந்த நோக்கத்திற்காகத் துவங்கப்பட்டதோ, அந்த நோக்கம் தற்போது பொருந்தாது. இப்பொழுதுள்ள கல்வி முறை முன்பு வகுக்கப்பட்ட நிலையிலேயே ஏறக்குறைய இருந்து வருகிறது; அதைச் சீர்திருத்த சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் நாட்டின் தற்கால வாழ்க்கைக்கு அது போதுமானதாக இல்லை."

‘கல்வி முறையை மாற்ற மேற்கொண்ட முயற்சிகள்’

‘நமக்குத் தோல்வியையே தந்துள்ளன!’

‘மனிதரை மதிப்பிட செல்வத்தை அளவுகோலாகக் கொள்ளலாகாது’

டாக்டர் இராசேந்திரர் கருத்து

புதுடில்லி, டிச. 28—

“ஒருவருடைய அறிவுத் திறனையும், நாணயமான — தன்னலமற்ற தொண்டு இவற்றின் அடிப்படையில் சமூகத்தில் அவருக்குள்ள பெருமையையும், கௌரவத்தையும் மதிப்பிட வேண்டுமேயல்லாது, செல்வத்தின் அளவைக் கொண்டு, அவருடைய பெருமையை மதிப்பிடுவது வருந்தத்தக்கதாகும்; இத்தகைய மனோபாவத்தைத் தக்க தருணத்தில் தடுத்து நிறுத்தாவிட்டால், பணத்தைக் கொண்டு மனிதனை மதிப்பிடும் போக்கு தவறான வழியில் செல்லுவதுடன் மட்டுமின்றி நாசத்தையும் ஏற்படுத்திவிடும்.

“பணத்தையே மேன்மையெனக் கருதும் ‘புதிய தத்துவம்’ இந்திய சமூகத்தில் தோன்றிவிட்டது; இந்தத் தத்துவம் ‘நச்சுச் சுழலை’ உண்டாக்கிவிட்டது. சமூகத்தில், தங்களுக்குப் பெருமை வேண்டுமெனக் கருதுவோர், அறிவு வளர்ச்சியிலும், தன்னலமற்ற தொண்டுகளிலும் கவனம் செலுத்துவதற்குப் பதில், ‘பணத் தேவதை’யை நாடுவதில் மொத்த முயற்சியையும் செலவிடுவதில் முனைந்துவிட்டார்கள்.

“இந்த நோய் கல்வித் துறையையும் பற்றிக்கொண்டுவிட்டது. முன்னைய நாட்களில் ஆசிரியர்கள் ஏழ்மை நிலையிலேயே இருந்தனர்; என்றாலும், சமூக வாழ்க்கையில் அவர்களுக்கு உயர்ந்த அளவுக்குப் பெருமையும், மதிப்பும் இருந்துவந்தது; ஆனால், இன்று, ஆசிரியர்கள் நிலைமைதான் எல்லோரையும்விட மோசமானதாக இருக்கிறது. அவர்கள் ஏழ்மை நிலைமையில் உழலுவதால், அவர்களுக்கு மதிப்பும், மரியாதையும் தரப்படுவதில்லை; அதனால்தான், சமூகத்தின் மதிப்பைப் பெறுவதற்கு அவர்கள், அதிகப்படியாகப் பணியாற்றி பணம் சம்பாதிக்கும் வழியில் செல்லுவதுடன், வாழ்க்கையைக் கழிப்பதற்கு, அளவுக்கு அதிகமாகத் தலைதூக்கி நிற்பதற்கும் முயலவேண்டியவர்களாக மாறிவிட்டனர்.”

—இவ்வாறு, 30-வது அ. இ. கல்வி மாநாட்டைத் துவக்கிவைத்துப் பேசுகையில், குடியரசுத் தலைவர் இராசேந்திரர் குறிப்பிட்டுள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

இந்திய சர்க்காரின் இறக்குமதிக் கொள்கை

சில புள்ளி விவரங்கள்

இயந்திரத் தொழில்கள், இந்தியாவில் துரிதமாகப் பெருகிவருவதால், அதற்கேற்றவாறு 1956-ம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் பெரிய தொழிற்சாலைகளுக்குத் தேவையான இயந்திரங்களும், இயந்திரத் தளவாடங்களும், தொழிற்சாலைகளின் உற்பத்திக்கு அவசியமான மூலப் பொருள்களும் அதிகமாக இறக்குமதி செய்யப்படுமாம்.

1956-ம் ஆண்டிற்கான 6 மாதத்திற்கான இறக்குமதிக் கொள்கையை விளக்கி இந்திய சர்க்கார் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

1955 ஜனவரி முதல் ஜூன் வரையில் ரூ. 320 கோடி மதிப்புள்ள பொருள்கள் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்டனவாம்.

1956-ம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் இறக்குமதியின் மதிப்பு ரூ 360 கோடியாக உயரக்கூடுமாம்.

1956-ம் ஆண்டில் உணவுப் பொருள்கள் இறக்குமதியின் மதிப்பு ரூ 10 கோடியாகக் குறைந்துவிடக்கூடுமாம்.

1955-ம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் ரூ. 45 கோடி மதிப்புள்ள உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது என்பது நினைவிலிருத்தக்கூடியதாகும்.

கல்கத்தா—லண்டன் ரேடியோ டெலிபோன்

கல்கத்தா, டிச 30—

கல்கத்தாவுக்கும்—லண்டனுக்குமிடையே ரேடியோ டெலிபோன் போக்குவரத்தை இன்று மத்திய சர்க்கார் அமைச்சர் ஜெகஜீவன்ராம் துவக்கிவைத்தார்.

****

புயல் நிவாரணச் சிறப்புக் கூட்டம்

1—1—1956 ஞாயிறு மாலை 5 மணிக்கு

சென்னை எழும்பூர் டென்னிஸ் ஸ்டேடியத்தில்

(எழும்பூர் இரயிலடிக்கருகில்) நடைபெறும்

அண்ணா
நெடுஞ்செழியன்
கருணாநிதி

ஆகியோர் பேசுவர்

★

அனுமதி நிபந்தனை:

பயன்படக்கூடிய துணி ஒன்று தருவோரே அனுமதிக்கப்படுவர்

—சென்னை மாவட்ட தி. மு. கழகம்

****

கொடுங்கையூர் (சென்னை) தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்கட்கு

1—1—56 காலை 8 மணிக்கு கொடுங்கையூர் (சென்னை) தி. மு கழகச் செயற்குழுக் கூட்டம், கழகப் பணிமனையில் நடைபெறும். அதுபோது பல பொருள்கள் குறித்து பேசப்படும்.

சொற் பயிற்சிக் கூட்டம்

1—1—56 காலை 9 மணிக்கு டாக்டர் சி. நடேசன் மன்றப் பணிமனையில், (எண் 44, லால் பேகம் தெரு, சேப்பாக்கம்—சென்னை) தோழர் கா. அப்பாதுரை தலைமையில், ‘கூட்டு வாழ்வு’ என்னும் தலைப்பில் சொற் பயிற்சிக் கூட்டம் நடைபெறும்.

சென்னைக் கல்விச் சங்கம்

1—1—56 மாலை 5 மணிக்கு சென்னை-பட்டாளம், ஸ்ட்ரான்ஸ் ரோட் ஆண் பள்ளியில் ‘தக்கார் தொடர்பு’ என்னும் பொருள் பற்றி திரு. கு. வே. இராமகோடி தலைமையில், திரு. வ. சுப்பிரமணியம் பேசுவார்.

ஆதிக்கத்தை நீடிக்க......

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அவர்கள் எல்லாம், உண்மையை அறியாதவர்கள்; கெட்ட எண்ணம் கொண்டவர்கள்; நடைமுறை அறிவு இல்லாதவர்கள் என்பதாகும்”

என்று, இந்திய உள்நாட்டுத்துறை அமைச்சர் பண்டித பந்த் குறிப்பிட்டிருக்கிறார்.

கர்நாடக பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் பேசிய அவர், கோவாவில் போர்ச்சுகீசிய ஏகாதிபத்தியவாதிகள் இன்னும் நெடு நாளைக்கு ஆட்சி செலுத்த முடியாது என்றும், விடுதலை வீரர்களின்—தியாக புருஷர்களின் எண்ணிக்கை வளரும்போது, ஏகாதிபத்தியவாதிகள் தங்கள் ஆதிக்கத்தை நீடிப்பது இயலாது என்றும் தெளிவாகப் பேசியிருக்கிறார்.

அவரது பேச்சு, போர்ச்சுகல் அயல்நாட்டு மந்திரி டாக்டர் குன்ஹா, மற்றும் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் டல்லஸ் ஆகியோரின் சமீபத்திய அறிக்கைக்குப் பதிலளிப்பதாக அமைந்திருந்தது.

மன்னிப்புக் காலம் முடிவடைகிறதாம்!

மலேயா கம்யூனிஸ்டுகளின் நிலைமை என்ன?

கோலாலம்பூர், டிச 30—

சமரசப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்காக மலேயா கம்யூனிஸ்டுப் பயங்கரவாதிகளுக்கு அளிக்கப்பட்டிருந்த மன்னிப்பும், பாதுகாப்பும் பிப. 8-ந் தேதியுடன் முடிவடைந்து விடுமாம். அந்தத் தேதிக்குப் பின்னர், காடுகளில் ஒளிந்துகொண்டுள்ள சுமார் 3,500 பேர்களையும் ஒழித்து விடுவதற்கு மீண்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமாம்.

‘பிரிட்டிஷ் ஒற்றர்’ இருவருக்கு தூக்குதண்டனை

போலந்து சர்க்கார் நடவடிக்கை

லண்டன், டிச. 30—

போலந்து தலைநகரான வார்சாவில் உள்ள இராணுவ நீதிமன்றம் ஒன்று, இரண்டு ‘பிரிட்டிஷ் ஒற்றர்’களுக்குத் தூக்குத் தண்டனை விதித்துள்ளதாக வார்சா வானொலி அறிவித்துள்ளதாம்.

இந்த இருவரும் வேறு சில ‘பிரிட்டிஷ் ஒற்றர்’களுடன் சேர்த்து விசாரிக்கப்பட்டனர் என்றும், அவர்களுக்கும் ஆயுள் தண்டனை முதல் எட்டாண்டு வரை சிறைத் தண்டனை தரப்பட்டது என்றும் கூறப்பட்டது.

‘நான்கு ஆண்களும், மூன்று பெண்களும் அடங்கிய கோஷ்டி ஒன்று, போலந்தில் ஒரு ஒற்றர் படையாக வேலை செய்துவந்தனர்—இராணுவம், மற்றும் அரசாங்க இலாகாவின் மிக இரகசியமான செய்திகளைப் பிரிட்டனுக்கு அனுப்பிக்கொண்டிருந்தனர்’—என்றெல்லாம் அவர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டதாம்.

பட்டினியுடன் 300 தொழிலாளர்கள் வேலை செய்தனர்

போராட்டம் தொடர்ந்து நடைபெறுகிறது

சென்னை, டிச. 30—

மைசூர் பிரீமியர் மெட்டல் தொழிற்சாலை, இந்துஸ்தான் ரோலிங் தொழிற்சாலைத் தொழிலாளர்களின் போராட்டம் தொடர்ந்து நடைபெறுகிறது.

நேற்று (29—12—55) இந்துஸ்தான் ரோலிங் தொழிற்சாலையில் 300 தொழிலாளர்களும் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை வழக்கம்போல வேலை செய்தனர்; ஆனால், பகல் உணவுக்காகத் தரப்படும் இடைவேளையில் அவர்கள் உணவு கொள்ளவில்லை. மாலை 5 மணிக்குப் பிறகும் தொழிலாளர்கள் வீடு திரும்பாமல் தொழிற்சாலைக்குள்ளேயே தங்கி பட்டினியுடன் இருந்து, காலையும் வேலை துவங்கினர். தங்களுக்குச் சக்தி இருக்கும்வரை பட்டினியுடன் வேலை செய்வர் என்றும் தெரியவருகிறது.

28-ந் தேதி முதல் தோழர் விநாயகம் என்ற தொழிலாளி தொழிற்சாலைக்கு வெளியே மேற்கொண்டுள்ள பட்டினிப் போராட்டமும் தொடர்ந்து நடைபெற்றவண்ணமுள்ளது.

தங்கசாலையில் உள்ள தொழிற்சாலை அலுவலகத்தின் முன்பு 28-ந் தேதியன்று மறியல் செய்த 13 தொழிலாளர்களுக்கும் 10 ரூபாய் அபராதம் அல்லது ஒரு வார சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. தொழிலாளர்கள் அபராதம் கட்ட மறுத்து சிறை புகுந்தனர்.

இராயபுரத்திலும், தங்கசாலையிலும் சர்க்கார் விசேட போலீசாரை ஏராளமான அளவு குவித்து வைத்திருக்கின்றனர்.

★

போராட்டத்திற்கு ஆதரவு

சென்னை 1-வது வட்ட தி. மு. கழகத் தீர்மானம்

இன்று கூடிய 1-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டத்தில், தொழிலாளர்களின் இந்தப் போராட்டத்தை ஆதரித்தும், குஜராத்தி முதலாளியின் அக்கிரமத்தைக் கண்டித்தும், சர்க்காரின் நேர்மையற்ற போக்கைக் கண்டித்தும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

மேலும், கழகத்தினர், தொழிலாளர்களின் கோரிக்கை நியாயமானவை என்பதால், அதற்குப் பொதுமக்கள் ஆதரவு தரவேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

வட இந்தியாவில் விலை உயர்வாம்!

வியாபாரிகளின் இலாப ஆசைதான் காரணமாம்!

இந்திய சர்க்கார் திட்டம் தயாராக இருக்கிறதாம்!

சென்னை, டிச. 29—

“வட இந்தியாவின் சில பகுதிகளில் காணப்படும் கோதுமை விலை உயர்வைத் தடுப்பதற்கு இந்திய சர்க்காரிடம் திட்டம் தயாராக இருக்கிறது,” என்று, மத்திய உணவு அமைச்சர் கூறியுள்ளார்.

விலை உயர்வுக்கு உண்மையான ‘கிராக்கி’ காரணமல்லவாம்!

வடநாட்டு வியாபாரிகளின் அதிக இலாப ஆசை நோக்கமே விலை உயர்வுக்குக் காரணமாம்!

பாகிஸ்தான்: ‘இஸ்லாமியக் குடியரசா’குமாம்

கராச்சி, டிச. 30—

பாகிஸ்தான் ஒரு ‘இஸ்லாமிய பெடரல் குடியரசா’கத்தான் இருக்கவேண்டுமென, முஸ்லிம் அல்லாத உறுப்பினர்களின் எதிர்ப்புகளையும் பொருட்படுத்தாமல், முஸ்லிம் லீக்—ஐக்கிய முன்னணி கூட்டு மக்கள் சபைக் கட்சியினர் முடிவு செய்திருக்கின்றனராம்.

கராச்சிதான் குடியரசின் தலைநகராக இருக்கும் என்றும், தொடர்ந்து அது மத்திய சர்க்காராலேயே நிர்வகிக்கப்படும் நகரமாக இருக்கும் என்றும் முடிவாகியிருக்கிறதாம்.

கட்சியின் இந்த முடிவை மாற்றும் அதிகாரம் பெடரல் மக்கள் சபைக்கே உண்டு என்றும் முடிவு செய்யப்பட்டதாம்.

இரங்கூன், டிச. 29—

மூன்று நாட்களுக்கு இரயில் போக்குவரத்து நடைபெற இயலாதவகையில், இரங்கூன்—மாந்தலே இரயில் பாதையிலுள்ள ஆறு பாலங்களைப் பர்மா கலகக்காரர்கள் தகர்த்துவிட்டனராம்.

இந்த முடிவுக்கு என்ன காரணமோ?

பெல்காம், டிச. 29—

ஏப்ரல் 6-ந் தேதிதான், கோவாவில் டாக்டர் சலாசர் பதவிக்கு வந்த தினமாகும்; அன்றையத் தினத்தில் எல்லா இந்தியா, கோவா அரசியல் கைதிகளுக்குப் போர்ச்சுகீசிய சர்க்கார் ‘மன்னிப்பு’ அளித்துவிடப் போவதாக பலமான வதந்தி நிலவுகிறதாம்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டம்

சென்னை, டிச. 31—

நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டம் சம்பந்தமாய் நிலக்கரிப் படிவுப் பகுதிகளில் சுரக்கும் தண்ணீரைப் ‘பம்பு’கள் மூலம் வெளியேற்றுவதற்காகப் பரவலான ரீதியில் நடத்தப்படும் பரிசோதனைகள் 1956 பிப்ரவரியில் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்பரிசோதனைகள் 100 நாட்கள் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.